## திருமங்கலம் நகராட்சி

## 31.05.2021 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள் தீர்மானம்

**1)**திருமங்கலம் நகராட்சியில் குழாய் பொருத்துநராக பணிபுரிந்து வந்த திரு.பி.தங்கராஜ் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.No.**355/2021**ன்படி ஓய்வூதியம் ஊதிய முரண்பாடு தொடர்பாக வழக்கு தொடந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் இந்நகராட்சி சார்பாக ஆஜரானதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.**20,000/–** (இருபதாயிரம் மட்டும்) வழங்கக் கோரி திரு.ஆர்.ஏ.எஸ்.செந்தில்வேல், Additional Government Pleader அவர்கள் பில்பட்டியல் சமர்ப்பித்துள்ளார். அன்னாருக்கு தொகை வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு **1)**அனுமதிக்கலாம்.
**2)**இந்நகராட்சி பொது நிதியில் தொகை வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2272: அனுமதிக்கப்பட்டது.**

**2)**திரு.பி.ராஜமோகன், முன்னாள் சுகாதார அலுவலர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.**14153/2018** மற்றும் W.M.P.(MD)No.12835 and 12836 of 2018ன்படி வழக்கு தொடந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் இந்நகராட்சி சார்பாக வாதுரை செய்தமைக்கு திரு.ஏ.கண்ணன், வழக்கறிஞர் அவர்கள் வழக்கறிஞர் கட்டணம் ரூ.**15,000/–** வழங்கக் கோரி உள்ளார். ரூ.**15,000/–** திரு.ஏ.கண்ணன், வழக்கறிஞர் அவர்களுக்க வழங்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு **1)**அனுமதிக்கலாம்.
**2)**இந்நகராட்சி பொது நிதியில் செலவு செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2273: அனுமதிக்கப்பட்டது.**

**3)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–**19** தடுப்பு பணிகள் மேற்கொள்ள TATA ACE வாகனத்தின் மூலம் லைசால் தெளிக்கும் பணிக்கு **11.05.2021** அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு **5** விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தேவி கேரியர்ஸ், செங்குளம், திருமங்கலம் | **1400** |
| 2 | சதுரகிரி கேரியர்ஸ், திருமங்கலம் | **1500** |
| 3 | ஏ.சஹானா கேரியர்ஸ், திருமங்கலம் | **1700** |
| 4 | ஓம் அகத்தியர் கேரியர்ஸ், திருமங்கலம். | **1900** |
| 5 | தேவி கேரியர்ஸ், கீழக்கோட்டை, திருமங்கலம். | **2100** |

அ.கு

1) அனுமதிக்கலாம்.
2) வரிசை எண்.1ல் கண்டுள்ள நிறுவனமான தேவி கேரியர்ஸ் நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதை ஏற்று விநியோக உத்தரவு வழங்கலாம்.
3) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2274: அனுமதிக்கப்பட்டது.**

4)திருமங்கலம் நகராட்சி 27 வார்டுகளில் உள்ள அனைத்து குடியிருப்புகள் மற்றும் குடியிருப்பு அல்லாத பயன்பாட்டிற்கும் UIDSSMT 2018–19 திட்டத்தின் கீழ் ரூ.360.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. இப்பணியில் இந்நகரின் விரிவாக்கப்பகுதிகிளில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத இடங்களில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க இயலாமல் உள்ளது. அவ்விடங்களுக்கு குடிநீர் பகிர்மான குழாய் புதிதாக பதிப்பது அவசியமாகிறது. எனவே இப்பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கும் இப்பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.927/2021/இ1**
**தீர்மானம் எண்.2275: அனுமதிக்கப்பட்டது.**

5)திருமங்கலம் நகராட்சி சோழவந்தான் தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள்ள 75HP Stand by மின் மோட்டார் பழுது ஏற்பட்டுள்ளது. மேலும் குடிநீர் நீரேற்று நிலையத்திற்கான 200KVA ஜெனரேட்டர் பேட்டரி (180AH) பழுதடைந்துள்ளது. இதனை சரி செய்வது அவசியமானதாகும். எனவே 75HP மின் மோட்டார் பழுது சரி செய்தல் மற்றும் 2 எண்ணிக்கை 180AH பேட்டரி கொள்முதல் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2,50,000க்கும் இப்பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.**

1.மன்றம் அனுமதிக்கலாம்
2.குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.926/2021/இ1**
**தீர்மானம் எண்.2276: அனுமதிக்கப்பட்டது.**

**6)**திருமங்கலம் நகராட்சி குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் நீரேற்றம் செய்தல் மற்றும் நகரின் தெருப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் வால்வுகளை இயக்குவதற்கான பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் **2020—21**ம் ஆண்டிற்கு வழங்குவதற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.**2131** நாள்.**28.04.2020** ரூ.**9.70** இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழக சட்டமன்றத் தேர்தல் நடத்தை விதிகள் அமலபடுத்தப்பட்டதால் **2021—22**ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை. குடிநீர் விநியோகப் பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியம் என்ற நிலையில் ஏற்கெனவே இப்பணிக்காக நியமிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு **2020—21**ம் ஆண்டிற்கான பணியின் மதிப்பீட்டின் சேமிப்பு நிதியில் இருந்து ஏப்ரல்—**2021**ம் மாதத்திற்கு பட்டியல் தொகை வழங்கியதற்கும் மே—**2021**ம் மாதத்திற்கு இப்பணியினை தற்போது மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திரு.எம்.பாலமுருகன் மூலம் ஏற்கெனவே வழங்கப்பட்ட ஒப்பந்த விகிதத்தின் அடிப்படையில் குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து பணி மேற்கொள்வதற்கும் இதற்கான மொத்த செலவினம் ரூ.**80,000** க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.958/2020/இ1**

**தீர்மானம் எண்.2277: அனுமதிக்கப்பட்டது.**

**7)**திருமங்கலம் நகராட்சி **27** வார்டுகளில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான **135** எண்ணிக்கை அடிகுழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து பொதுமக்களுக்கு தடங்கல் இன்றி தண்ணீர் வழங்குவது அவசியமாகிறது. எனவே அடிகுழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கான ஆண்டு பராமரிப்பு பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கும் இதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.**3.00** இலட்சத்திற்கும் இப்பணியினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 947/2021/இ1**

**தீர்மானம் எண்.2278: அனுமதிக்கப்பட்டது.**

**8)**திருமங்கலம் நகராட்சி வார்டு எண் 1 முதல் 27 வரை உள்ள தெருக்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 165 எண்ணிக்கை சிறுமின்விசை பம்ப் மூலம் (Mini OHT) தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விசை பம்ப்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து சீராக இயக்கவேண்டியது அவசியமாகிறது. எனவே சிறுமின்விசை பம்ப்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கான ஆண்டு பராமரிப்பு பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கும் இதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.6.50 இலட்சத்திற்கும் இப்பணியினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2.குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 937/2021/இ1**
**தீர்மானம் எண்.2279: அனுமதிக்கப்பட்டது.**

**9)**கூடுதல் இயக்குநர் / திட்ட இயக்குநர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மதுரை அவர்களின் ந.க.எண்.4647/2017/அ5 நாள்.06.01.2021 கடிதத்தில் திருமங்கலம் நகராட்சி வார்டு எண்.2 முகமதுஷாபுரம் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கதொட்டி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடத்தினை நகர வாழ்வாதார மையமாக பயன்படுத்திக் கொள்வதற்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது. அதன்படி இக்கட்டிடத்திற்கு தேவையான தண்ணீர்வசதி, மின்வசதி, வர்ணம்பூசுதல் போன்ற மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கும் அதற்கான மதிப்பீடு ரூ.1,75,000க்கும் இப்பணியினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொற்வதற்கும் தனிஅலுவலரின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.702/2020/இ1**
**தீர்மானம் எண்.2280: அனுமதிக்கப்பட்டது.**

**10)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–19 தடுப்புப் பணிகள் மேற்கொள்ள லைசால் 2000 லிட்டர் விநியோகம் செய்யும் பணிக்கு 31.05.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | லிட்டர் ஒன்றுக்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஈஸ்வரி எண்டர்பிரைசஸ், தேவகோட்டை | 155 |
| 2 | நாகப்பா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், காரைக்குடி | 165 |
| 3 | அருண் ஏஜென்ஸிஸ், மதுரை | 190 |

அ.கு

**1)**அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனமான ஈஸ்வரி எண்டர்பிரைசஸ், தேவகோட்டை நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியுள்ளதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2281: அனுமதிக்கப்பட்டது.**

**11)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–19 தடுப்புப் பணிகள் மேற்கொள்ளவும், பொதுமக்களிடம் நோய் தொற்று தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்த ஆட்டோவில் விளம்பரம் செய்யும் பணிக்கு 17.05.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நபர் ஒன்றுக்கு வாடகை ரூ. |
|---|---|---|
| 1 | சதீஷ் ரேடியோஸ், திருமங்கலம் | 4500 |
| 2 | எம்.ராஜன் ரேடியோஸ் & ஆடியோஸ், திருமங்கலம் | 6400 |
| 3 | பாப்பா ரேடியோஸ், திருமங்கலம் | 5600 |

அ.கு

**1)**அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனமான சதீஷ் ரேடியோஸ் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியுள்ளதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2282: அனுமதிக்கப்பட்டது.**

12)திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு கபசுரக் குடிநீர் விநியோகம் செய்து கோவிட்–19 தொற்றினை கட்டுப்படுத்தும் பணியினை மேற்கொள்ள 22.05.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | கிலோ ஒன்றுக்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ராஜா சித்தா மருந்தகம், கப்பலூர் | 1190 |
| 2 | ஸ்டார் எண்டர்பிரைசஸ், மதுரை | 1240 |
| 3 | சந்திரா ஏஜென்ஸீஸ், மதுரை | 1280 |

அ.கு

1)அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனமான ராஜா சித்தா மருந்தகம், கப்பலூர் அவர்களுக்கு விநியோக உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2283: அனுமதிக்கப்பட்டது.**

13)திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–19 தடுப்புப் பணிகள் மேற்கொள்ள காய்ச்சல் அறிகுறிகள் தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்வது தொடர்பான படிவங்கள்

1) கணக்கெடுப்பு படிவம் – 10000
2) வீடுகள் வாரியான கணக்கெடுப்பு படிவம்–5000
3) நோய் அறிகுறி உள்ளவர்கள் கணக்கெடுப்பு படிவம் – 5000

மேற்கண்ட படிவங்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 27.05.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | கிலோ ஒன்றுக்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Radhil Fine Printing System, Thirupparankundram | 0.70 |
| 2 | Gogul Offset Printers, Madurai | 0.85 |
| 3 | Vaishali Visual & Media Works, Madurai | 0.95 |

அ.கு

1)அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Radhil Fine Printing System, Thirupparankundram குறைந்த விலைப்புள்ளி வழங்கியதை ஏற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2284: அனுமதிக்கப்பட்டது.**

14)திருமங்கலம் நகர்பகுதி குடிநீர் குழாய்களுக்கான ஆண்டு பராமரிப்பு பணியினை 2021–22ம் ஆண்டு குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் ரூ.8,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு தனி அலுவலரின் முன் அனுமதி நாள் 25.02.2021 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 30.03.2021–ம்தேதியில் முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1) திரு.சி.ஜெயச்சந்திரன்,ஒப்பந்ததாரர் திருமங்கலம் | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.08% குறைவு |
| 2) திரு.எம்.பாலமுருகன்,ஒப்பந்ததாரர் திருமங்கலம் | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.09% கூடுதல் |

<u>அ.கு.</u>

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.ஜெயச்சந்திரன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 99/2021/ இ1**
**தீர்மானம் எண்.2285: அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
திருமங்கலம்.